உமறுப்புலவர் விருதும்
உள்ளத்து உணர்வும்

வரலாற்றாசிரியர்
செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

உமறுப்புலவர் விருதும்
உள்ளத்து உணர்வும்

வரலாற்றாசிரியர்
செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

சுகைனா பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் **86–ஆவது நூல்**

முதற் பதிப்பு	:	02.10.2011
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.

காணிக்கை

சிரித்த முகத்தோடு வருவாய்
சிந்தை மகிழ மச்சான் என அழைப்பாய்
சாலை விபத்தில் பலியாகி எங்களை
சோகத்தில் ஆழ்த்திச் செல்வாய் என்று
சற்றும் எதிர்பார்த்திராத மாப்பிள்ளை
சேகருக்கு . . .

செ.திவான்

எண்ண அலைகள்

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மூன்றாம் மாநில மாநாடு, படைப்பிலக்கியப் பயிலரங்கு செப்டம்பர் 30, அக்டோபர் 01 ஆகிய நாட்களில் குற்றாலம் செய்யது மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. 02.10.2011 அன்று தென்காசி, இசக்கி திருமண மண்டபத்தில் நிறைவு விழா தமிழர் தலைவர் **வைகோ** நிறைவுரை ஆற்றிட இனிதே நிறைவேறியது.

கவிக்கோ அப்துல் ரகுமான், கண்ணியமிகு எஸ்.எம்.இதயாத்துல்லா, பொருளாளர் எஸ்.எஸ். ஷாஜகான், கவிமாமணி தி.மு.அப்துல் காதர், சிலம்பொலி செல்லப்பனார் கலந்து கொண்ட இம்மாநாட்டில் வரலாற்று மாணவனாகிய எளியேனுக்கு **உமறுப்புலவர்** விருது வழங்கிச் சிறப்பித்தார்கள். அப்போது உள்ளத்தில் எழுந்த எண்ணங்களின் விளைவே இச்சிறு நூல்.

செ.திவான்

உமறுப்புலவர் விருதும் உள்ளத்து உணர்வும்

“அருளாளனும் அறிவாளனும் அறவாளனும் உலகோர்
உறவாளனும் உணர்வாளனும் உயர்வாளனும் அழியாப்
பொருளாளனும் புகழாளனும் பொறையாளனும் மறையோர்
உறையாளனும் நிறையாளனும் இறையே”[1]

“தோன்றிய மொழிகள் பலகோடி
தொலைந்தது அவைகளில் பெரும் பகுதி
தோன்றிய காலந் தெரியாமல்
தூய்மையில் இளமையாய் வாழுகின்ற தமிழே!”[2]

“கண்ணுக்கு மூடி வைத்த இறைவன் காதுக்கு வைக்காதது ஏன்?
செவி உண்டியலில் நாம் எதிர்பாராத நேரத்திலும் காசு விழலாம்;
அதற்காகத்தான்”[3] என்பீர்கள்;

அவையோர்களே! ஆன்றோர்களே! சான்றோர்களே! உமறுப்புலவர் விருது, வாழ்நாள் சாதனையாளர்கள் விருது, சமுதாயச் சுடர் விருதுகளை வழங்கி நிறைவு விழாப் பேருரை ஆற்றிட வந்திருக்கும்,

வரலாற்றுப் பாலையில் வந்த வசந்தம்
வார்த்தை அருவி! தமிழர்களைத் தட்டி
எழுப்பிய புதிய விடியல்[4] *வைகோ அவர்களே!*

இஸ்லாமிய இலக்கியக் கழக நெறியாளர்
சங்கம் வளர்த்த மதுரையிலே பிறந்தவர்
தாத்தாவும் தந்தையுமே உருதுக் கவிஞர்கள்

பன்மொழிப் புலமை பன்னூலாசிரியர் பேராசிரியப் பெருந்தகை

கவிதை ரசிகர்களின் இதய சாம்ராஜ்யத்தை ஆண்டதால் 'கவிக்கோ' அவர்களே!

இஸ்லாமிய இலக்கியக் கழக சிறப்பு நெறியாளர் அண்ணன் கேப்டன் அமீர் அலி அவர்களே, பெரும் புலவர் நைனார் முகம்மது அவர்களே,

'நெஞ்சை அள்ளும் சீறா' பல பாகங்களாய்த் தந்திட்ட சீறாசெல்வர் செல்லப்பனார் அவர்களே,

இஸ்லாமிய இலக்கியக் கழகத் தலைவர் கண்ணியத்திற்குரிய அண்ணன்

எஸ்.எம். இதாயத்துல்லா அவர்களே!

இஸ்லாமிய இலக்கியக் கழகப் பொருளாளர் அன்பிற்குரிய எஸ்.எஸ். ஷாஜகான் அவர்களே!

பொதுச் செயலாளர் பாசத்திற்குரிய பேராசிரியர் மு. அப்துல் சமது அவர்களே!

இஸ்லாமிய இலக்கியக் கழகத் துணைத் தலைவர்கள் அன்பிற்குரிய அண்ணன் பேராசிரியர் கவிமாமணி தி.மு.அப்துல்காதர் அவர்களே, பிரசிடெண்ட் அபுபக்கர் அவர்களே, பேராசிரியர் ஏ.காதர் பாட்சா அவர்களே, முனைவர் ஹெளத் முகைதீன் அவர்களே,

இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் துணைச் செயலாளர்கள் மேஜர் மு.ஜெயிலானி அவர்களே, பேராசிரியர் எம்.முகம்மது நாசர் அவர்களே, பொறியாளர் அப்துல்காதர் அவர்களே, முனைவர்.பர்வீன் சுல்தானா அவர்களே,

நல்லிணக்க இலக்கிய விருதுகளை வழங்கிய நெல்லை சையது குழுமத் தலைவர் அல்ஹாஜ், டி.இ.எஸ். பத்ஹுர் ரப்பாணி அவர்களே!

வெடுத்து வீசிய சண்டமாருதத்தினுக்கெதிரே!

மிடித்து நொந்த சிற்றெறும்பொரு மூச்சு விட்டது போல்!

ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று, ஒரு

பூசை, முற்றவும் நக்குபு புக்கென,

ஆசை பற்றி அறையலுற்றேன்[6]

பூசை உற்று, அதனை நக்கப் புக்கு என உள்ளத்தைத் தூண்டும் ஆசை உற்று[7]

எட்டாத உயரத்திலுள்ள பழத்தை குள்ளன் அடைய விரும்புவது போல,

கடலைக் கடக்க ஒரு தெப்பக் கட்டையைப் போட்டு முயல்வது போல,

அவர்கள் வஜ்ரம் போன்றவர்கள்; அந்த வஜ்ரம் தொளைத்த தொளை வழியே

செல்லும் நூல் நான்.[8]

உமறுப்புலவர், கம்பன், வீரமாமுனிவர், காளிதாசன் ஆகியோரது அவையடக்க வரிகள் அலைகளாய் நெஞ்சில் மோதுகிறது.

அடியேன் எளியேன். 'நாட்டை ஆண்டவரும்', சிலம்பொலி செல்லப்பனாரும் பெற்ற விருதை,

திவானுக்கும் தந்து மகிழ்கிறீர்கள்.

"காத்திருத்தல் ஓர் தவம். அதற்கு வரம் கிடைக்காமல் போகாது என்பீர்கள்."[9] இன்று எளியேனுக்குக் கிடைத்திருக்கிறது.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு 1993-இல் 'சீதக்காதி' அறக்கட்டளையின் 'ஷேக் ஸதக்கத்துல்லாஹ் அப்பா' இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரிசு அடியேனுக்குக் கிடைத்தது. சீதக்காதி, ஸதக்கத்துல்லாஹ் என்று மட்டும் இருந்த எனக்கு இப்போது உமறுப்புலவர் விருதையும் தந்துள்ளீர்கள்.

வள்ளல் சீதக்காதி (செய்கு அப்துல் காதிர்) சீறா காப்பியத்திற்கு கருப்பொருளைப் பெற்றிட ஷேக் ஸதக்கத்துல்லாஹ் அப்பாவிடம் அழைத்துச் சென்றதும், உமறுப் புலவரின் புறத்தோற்றம் கண்ட ஸதக்கத்துல்லாஹ் அப்பா உரை தர மறுத்ததும், நபிகள் நாயகம் (இறைவனின் சாந்தி இலங்குவதாக) கனவில் வந்ததும், அப்பா உரை தந்ததும், உமறுப் புலவரின் வரலாற்றுச் செய்திகள்.

28.07.1946 இது போன்றதொரு ஞாயிறு மாலை 4.00 மணியளவில் சென்னையில் சைனா பஜார் பச்சையப்பர் மைதானத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியின் தலைமையில் நடைபெற்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நிதியளிப்பு விழாவில், தமிழ்த் தாயின் தவப்புதல்வன் அறிஞர் அண்ணாவிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொண்டு பாரதிதாசன் ஆற்றிய உரை நினைவுக்கு வருகின்றது.

விருது வழங்கிய தமிழர் தலைவர் வைகோ அறிஞர் அண்ணாவின் சாயலைப் பெற்றவர். ஆனால் அடியேன் பாரதிதாசன் அல்ல. அவரின் அணுக்கத் தொண்டன்.

"செய்யத் துணிபவனுக்கு, எண்ணத் துணிபவனுக்குத்தான் வெற்றி கிட்டுகிறது. தன்னுடைய செயல் முறையும் கொள்கையும் சரியானது என்று நம்புபவன் எந்த எதிர்ப்புக்கும் அஞ்சி கொள்கையினின்றும் பிறழக்கூடாது. இவனுக்கு என்றாவது ஒரு நாள் வெற்றி வந்தே தீரும். என் வாழ்நாள் முழுவதும் இதுவே என் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. சுயேட்சையான மனோ பாவத்திடம் எனக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் பலன்தான் நான் இன்று பெற்றிருக்கும் பணமுடிப்பு."[10]

நிரந்தரமான மாறுதலடையாத் தனிச்சிறப்புடைய நேர்த்தி, திண்ணம், முறைமை, மனவலிமையே ஆத்ம ஞானம். இஸ்லாமிய ஆத்மஞானம் எனும் சூபித்துவக் கவிஞர்களில் தமிழகத்தில் காலத்தால் முந்தியவர், சூபித்துவக் கோட்பாடுகளை அறநெறியில் எடுத்துக்காட்டிய பெருமைக்குரிய சொந்தக்காரரர். இஸ்லாமிய ஞானக் கருத்துக்களுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தவர். வாவாஞ்சி குடும்பத்தில் வந்த சிறுமலுக்கரின் புதல்வர் 18,000 பாடல்கள் தமிழுக்குத் தந்தவர் (தமிழரின் கவனக்குறைவால் பல ஆயிரம் பாடல்களை இழந்துள்ளோம்) பீர் முஹம்மது அப்பா தோன்றிய தென்காசி நகரம்.

திருவனந்தபுரம் ஷண்முகவிலாச அச்சுக்கூடத்தில் 1855-இல் அச்சிடப்பட்ட 'ஞானமிர்த போதனை' பாடிய துணி வியாபாரம் பரிமள முகம்மது பிறந்திட்ட தென்காசி நகரம்.

கம்ப மாநகர் காதிறு பாட்சா ராவுத்தர் மகள் பீரம்மாள் எனும் ஆமீனா அம்மாள், கம்ப மாநகர் சடைச்சி சையதம்மாள் எனும் ஆயிஷா உம்மா ஆகியோர் தந்த

மெய்ஞ்ஞானப்பாக்கள், கீழக்கரையில் பிறந்து அரபுத் தமிழில் 'ஞானப் பாடற்றிரட்டு' தந்த சையிது ஆசியா உம்மா, இளையான்குடி லுக்மான் ராவுத்தர் புதல்வி 1918-இல் 'மெய்ஞ்ஞானமாலை' தந்திட்ட கச்சிப் பிள்ளையம்மாள் பெண்பாற் சூபிக் கவிஞர்களுக்கு முன்னதாகவே தென்காசி நைனார் முகம்மதுவின் மகளும் பரிமள முஹமது காசிமின் மனைவியுமான இரசூல் பீவி பிறந்தது தென்காசி. அவர் பாடிய 'ஞானமிர்த சாகரம்' நூறு ஆண்டுகளுக்கு முன்பே, 1910-இல் ஸ்ரீராமானுஜம் அச்சு எந்திர சாலையில் பதிப்பிக்கப் பெற்ற தென்காசி நகரம்.[11]

இரசூல் பீவி பேரில் புகழ் பாக்கள் பாடிய முஸ்லிம்கள் பலர்

பாளையங்கோட்டை எம்.சுப்பையாபிள்ளையும் (ஞானசுகிந்தம்)

தென்காசி பாடலிங்க முதலியார் பாடிய பாயிரந் தேற்றல்

தென்காசி கிருஷ்ணம்மாள் சந்நியாசி பாடிய நாமாவழிகள்

சமய நல்லிணக்கத்திற்குச் சான்றுகளல்லவா!

உமறுப்புலவருக்கு நினைவிடம் 1921-இல் அமைத்தது அ.பிச்சையாக் கோனார் அல்லவா!

ஆங்கிலேயரது ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்து 1900-ம் ஆண்டு அரசுக்கு மிகக் கடுமையானதும் செலுத்துதற்கு எளிதல்லாததுமான வரியைச் செலுத்த மறுத்த தென்காசி நகரம்.[12] (In 1900, the Citizens of Tenkasi refused to pay the Punitive Tax)

தென்காசி வர்த்தகர்கள் மீலாது விழாக்குழு 25 பைசாவில் உமறுப்புலவரின் 'முதுமொழி மாலையை' அச்சிட்டு மகிழ்ந்த தென்காசி நகரம்

அடியேன் பிறந்த செங்கோட்டைக்கு அருகில் ஆன்றோர்கள், சான்றோர்கள் அளித்திட்ட விருதைப் பெறும் பாக்கியத்தைத் தந்திட்ட எல்லாம் வல்ல ஏக இறைவனுக்கு எத்தனை தடவை நன்றி சொன்னாலும் தீராது! தீராது!

உடல் நலிவுற்ற வேளையிலும் உள்ளஞ் சோர்ந்திருந்த போதிலும் உன் பணியைச் செய் என்று உற்சாகமூட்டி எளியேனை ஊக்குவித்திடும் கண்ணியத்திற்குரிய அண்ணாச்சி திருமிகு வைகோ அவர்களுக்கும், என் வாழ்வில் 25 ஆண்டு காலம் இன்பத்தைத் துறந்தவளும் துன்பத்தைச் சுமந்தவளுமான என் துணைவியார் டாக்டர் திவானி ஜஹானரா, என் பிள்ளைகள் நஜாத், சுகைனா மழலைமொழிகள் வாழ்வில் நான் கேட்டறியாதது. அத்தா திண்ணையில் எழுதிக் கொண்டு இருக்கிறார். எதுவும் கேட்க வேண்டாம். எதுவும் கேட்க வேண்டாம் என்று என் வாழ்நாளில் என்னிடம் எதுவுமே கேட்காத என் பிள்ளைகள் என் நன்றிக்குரியவர்கள்.

இலக்கியத்தைக் கவிதையானாலும், கட்டுரையானாலும், பொழுது போக்காகவோ, வேடிக்கையாகவோ, விளையாட்டாகவோ கருதாத படைப்புக் கலைஞர்; வார்த்தைகளை வைரக் கடைசலாக்கும் தேர்ச்சி, பக்குவ முதிர்ச்சி கொண்ட கவிக்கோ போன்றவர்கள் இருக்கும் அவையில் சீறாப்புராணம் குறித்தும், உமறுப்புலவர் குறித்தும், இஸ்லாமிய இலக்கியங்கள் குறித்தும் அடியேன் விளக்கிட முயல்வது பேதமை என்பதால் அதற்குள் செல்லவில்லை.

இஸ்லாமிய சமுதாயம் இலக்கியமானாலும், வரலாறானாலும், புதையல்களை நிறையப் பெற்றிருக்கிற சமுதாயம்.

'சன்மார்க்க விவேக விருத்தி' என்ற மாதப் பத்திரிகை தொடங்கத் திட்டமிட்டுகிறார் வடலூர் வள்ளலார். தானே ஒரு ரூபாய் நிதியும் தருகிறார். கூட்டத்திலிருந்தவரிடம் வசூலித்த தொகை 15 ரூபாய் 9 அணா 9 பைசா. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் அபுல் காசீம் தோன்றிய பரங்கிப்பேட்டை நகர்வாழும் காதர் சாய்பு வள்ளலாரிடம் 1 அணா தருகிறார். எப்போது 1867-இல்[13] இது இலக்கிய அரங்கில் ஒரு துளி.

இனி அரசியல் அரங்கில் . . .

1799 அக்டோபர் 16-இல் பாஞ்சைப் பெருவேந்தன் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாளின் நினைவாக, 1906 அக்டோபர் 16-இல் தேச பக்தச் செம்மல்

வ.உ.சிதம்பரம்பிள்ளை 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி'யைத் துவக்குகிறார்.

மூலதனம் 10 லட்சம் ரூபாய். 40 ஆயிரம் பங்குகள்; பங்கு ஒன்றுக்கு 25 ரூபாய். பங்குகளை ஆசிய நாட்டவர்தான் வாங்க முடியும். பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் வாங்கியது 2000 பங்குகள். 50000 ஆயிரம் ரூபாய். மதுரை சௌராஷ்டிர சபையின் தலைவர் கே.வி.ராமாச்சாரி 50 பங்குகள் 1250 ரூபாய்.[14]

பாரதியின் மைத்துனர் அப்பாத்துரை ஐயர் தமிழகமெங்கும் சென்று கப்பல் கம்பெனியின் பங்குகளை விற்க முற்பட்டார் என்று செல்லம்மாள் பாரதி கூறுகிறார்.[15]

வ.உ.சி. மதுரைக்குப் பயணம் செய்தார்; 1907 மார்ச் 17 சென்னைக்குச் சென்றார்; கடலூர் சென்றார்; மார்ச் 31 தூத்துக்குடி திரும்பினார். இவரது பயணத்தை ஆங்கிலேய அரசாங்கம் யாசிக்கும் பயணம் (Begging Tour) என்று கேலி செய்தது.[16]

வ.உ.சி. சேலம் சென்றார். விஜயராகாவாச்சாரியார், திருமலை அய்யர், பி.வி. நரசிம்ம அய்யர், நஞ்சுண்ட அய்யர், அழகப்ப செட்டியார் ஆகியோரைச் சந்தித்தார். 1907 செப்டம்பர் 4-இல் தூத்துக்குடி திரும்பினார்.

சென்னையில் மண்ணடி தெருவில் 42, ஜார்ஜ் டவுணில் W. ஸ்ரீனிவாசன் என்ற ஏஜெண்டு நியமிக்கப்பட்டார். 4 துணை ஏஜெண்டுகளும் நியமிக்கப்பட்டனர். சுதேசிக் கப்பல் கம்பெனி பங்குகள் விற்பதற்காக.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வந்தேமாதரம்பிள்ளை என்ற சண்முகசுந்தரம்பிள்ளை, கல்யாண சுந்தரம் அய்யர், கப்பல் கம்பெனி பங்குகளை விற்பதற்குச் சென்றவர்கள். தூத்துக்குடி முத்தையாபிள்ளை மதுரையிலே பங்குகளை விற்கச் சென்றவர். மு.ரா. கந்தசாமிக் கவிராயர் சேலம் சென்று, சேலம் கல்லூரி பண்டிட் நடராஜ அய்யர் துணையுடன் பங்குகளை விற்றார். சி.சுப்பிரமணிய அய்யரும் முயன்றார். ஆந்திரப்பிரதேசம், பர்மா, சிலோன் ஆகிய இடங்களிலும் பங்குகள் விற்கப்பட்டன.[17]

பம்பாயில் 10000 பங்குகள் விற்றன. 250000 ரூபாய். வணிகர் கே.ஜெ.முகம்மது பக்கீர் சேட் மட்டும் வாங்கிய பங்குகள் 8000. இரண்டு லட்ச ரூபாய். [18]

K.J.Mohamed Fakir sait, a business man of Bombay, purchased 8,000 shares worth of 2,00,000. He was the major share holder of the company.[19]

அன்று தூத்துக்குடியில் பிரசித்தி பெற்ற வணிகர்கள் இஸ்மாயில் ஹாஜி அப்துல் ரகுமான் சேட், கொழும்பு ஏ.எம்.செய்யது இப்ராஹிம், திண்டுக்கல் - ஏ.அசனுசைன் இராவுத்தர், இராமநாதபுரம் - சீனி.அசனுசைன் இராவுத்தர்.[20]

சுதேசிக் கப்பல் கம்பெனியில் மொத்தப் பங்குகள் விற்பனையில் கிடைத்த தொகையே ரூபாய் ஆறு இலட்சம் தான். இதில் ஹாஜி பக்கீர் முஹம்மது சேட் தந்தது மட்டுமே இரண்டு லட்சம். மேலே சொன்ன மற்றவர்களும் வாங்கியிருக்கிறார்கள். மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் முஸ்லிம்களின் பங்களிப்பு சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு. இந்திய சுதந்திரப் போருக்கு.

இனி இலக்கிய ஆய்வில் ஒரு துளி . . .

சென்னை இராயப்பேட்டை சாது அச்சுக்கூடத்தில் 20.09.1940-இல் முக்கூடற்பள்ளுவை பதிப்பித்தவர் தமிழறிஞர் மு.அருணாசலம். நூலாசிரியர் பெயர் அறிய முடியவில்லை; **முக்கூடற்பள்ளு இதுவரை அச்சாகவில்லை.** முக்கூடற்பள்ளு நாடகம் 1886, 1894 முதலிய பல ஆண்டுகளில் அச்சிடப்பட்டிருக்கிறது என்று அதில் குறிப்பிடுவார். 14.01.1949-இல் இரண்டாம் பதிப்பு வெளியிடுகிறார். அதிலும் இதே தகவல்களைத் தருகிறார்.

இரண்டாம் பதிப்பில் ‘முக்கூடற்பள்ளு அல்லது கவியும் கூத்தும்’ என்ற தலைப்பில் இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் பக்கம் 48 முதல் 57 வரை 9 பக்கங்கள் எழுதியுள்ளார். அதில் அவர் குறிப்பிடுகிறார்:

‘சுமார் இருபது வருஷத்துக்கு முன் குஜிலிக் கடைத் தெருவில் ஒரு வியாபாரி தமிழ் புஸ்தகங்களைக் கீழே பரப்பி விற்றுக் கொண்டிருந்தான். பீங்கான் கடையின் முகப்புக்குப் பக்கத்தில் தான். டிட்மார்க் லாந்தல் வாங்கப் போன நான்,

புஸ்தக வியாபாரியிடம், யோசனை ஒன்றும் ரொம்பவும் பண்ணிவிடாமல் முக்கூடல்ப் பள்ளு இருக்கிறதா என்று கேட்டேன். 'ஆமாம். இருக்கிறதையா' என்று சொல்லி ஒரு புஸ்தகத்தை எடுத்து தூசியை நன்றாகத் தட்டிவிட்டு (அந்தக்காலம் தார் போடுகிற வழக்கம் கிடையாது தெருக்களுக்கு) இதோ என்று கையில்க் கொடுத்தான். விலை எட்டணா என்று போட்டிருந்தது. 'இதா விலை' என்று கேட்டேன். 'புஸ்தகத்தில் போடுகிற விலை அது. ஒன்றரை அணா கொடுங்கள்' என்றான் அவன். நானும் சந்தோசமாய் ஒன்றரை அணாவைக் கொடுத்துவிட்டு புஸ்தகத்தை வாங்கிக் கொண்டேன். அந்தப் புஸ்தகம் பதிப்பு சரியாக இல்லை என்று சொல்வார் டி.கே.சி.

அடியேன் சொல்வது இதிலிருந்து முக்கூடற் பள்ளு ஏற்கனவே அச்சாகியிருக்கிறது என்ற உண்மை விளங்குகிறதா? இல்லையா? அந்தப் பதிப்பு பற்றிய விபரம் இதோ;

திருநெல்வேலிப் பேட்டை பரிமளக்கார வீதியிலிருந்து உயர்திரு ம.மேத்தர் முகிதீன் அவர்கள் விருத்தாச்சலம் தியாகராசக் கவிராசரவர்களைக் கொண்டு பல சுவடிகளை ஆராய்ந்து பாங்காக்கி, உருத்திரோற்காரி ஆண்டு ஆடி மாதம் முதல் பதிப்பு வெளியிட்டார்கள். இது ஏறத்தாழ 1923-இல். இதன் பின்புதான் மு.அருணாசலம் பதிப்பு வந்தது 1940-இல். ஆனால் அவர் அதுதான் முதற் பதிப்பு என்கிறார். ம.மேத்தர் முகிதீன் பதிப்பு தமிழ் இலக்கிய வரலாற்றில் மறைக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற மறைக்கப்பட்ட பக்கங்களை வெளிக் கொண்டு வரும் ஆய்வுப் பணிகளை இஸ்லாமிய இலக்கிய மாநாட்டுப் பிரதிநிதிகள் மேற்கொள்ள வேண்டும்.

1942- ஜுலையில் செண்பகராமன்பள்ளுவை பரிசோதித்து வெளியிடக் காரணமானவர் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் மகாமதி சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் தானே!

முக்கூடற்பள்ளு நாடகம் என்ற நூலை நாடகமாக அமைத்தவர் வேளாளர் 'சின்னத்தம்பி' என்ற பெயரையுடைய என்னயினாப்புலவர்

என்னயினான் என்பதை - எல்லார்க்கு நயினான் என்பதன் திரிபு என்பார் மு.அருணாசலம். இது சரியா?

என்னயினாப் புலவர், 'முஸ்லிம் புலவர்' என்று முற்போக்கு இலக்கிய முன்னோடி தொ.மு.சி. ரகுநாதன் என்னிடம் பலமுறைச் சொல்லி ஆய்வு செய்யச் சொன்னார். சிற்றிலக்கியப் புலவர் அகராதி ந.வீ.செயராமன் தொகுத்தது 1983-இல் என்னயினாப் புலவர் 17 ஆம் நூற்றாண்டு பள்ளு: முக்கூடற் பள்ளு நாடகம் என்று பக்கம் 55-இல் குறிப்பிடுகிறார்.

பாளைமணம் கமழ்கின்ற கயிற்றாற்றுப்

பெருமாளே பழிகாரா கேள்,

வேளை என்றாலிவ்வேளை பதினாறு

நாழிகைக்கு மேலாயிற்றே

தோளை முறித்ததுமின்றி நம்பியானையுங்

கூடச் சுமக்கச் செய்தாய்

நாளை இனி யார் சுமப்பார்?

இந்தப் பாட்டு காளமேகப் புலவர் பாடியதாகவும் சொல்லப்படுகிறது. அது பற்றிய விவாதத்தை இங்குக் கிளப்பவில்லை. எப்படியும் இன்று கயிற்றாற்றுப் பெருமாள் கோயில் பாழ்பட்டுக் கிடப்பதைக் காண்கிறோம். அதற்குக் காரணம் இப்பாட்டுத்தான் என்று சொல்லப்படுகிறது.

ஆண்டான் கவிராயன் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஒரு முஸ்லீம் என்று கூறும் ஒரு கட்சி உண்டு. இது விவாதத்திற்குரிய விஷயம். இது சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் 'ஊழியன்' இதழில் 15.02.1935-இல் 'பட்டணங்களைப் பற்றி ஆண்டானின் அபிப்பிராயம்' என்ற தலைப்பில் எழுதியது ஆகும்.

இவை போன்றவைகளை ஆராய வேண்டியது இஸ்லாமியத் தமிழ் அறிஞர்களின் எளியேன் போன்ற ஆர்வலர்களின் கடமையாகும். செய்கு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை கிபி. 1842-இல் சீறாப்புராணத்தை முதலில் அச்சில் பதிப்பித்தார்.

கோட்டாறு செய்யது அபுபக்கர்ப் புலவர் இயற்றிய 'சீறாப்பத'மென்று வழங்குகின்ற 'சீறாக்கீர்த்தனம்' (1811, 1863,

1895), காயல்பட்டினம் மகுதூமுகம்மதுப் புலவர் இயற்றிய 'சீறாவசன காவியம்' (1865, 1886, 1887, 1888, 1896).

யாழ்ப்பாணம் சேகுதம்பிப் புலவர் பாடிய 'சீறா நாடகமென்று வழங்கா நின்ற காரணமாலை' (1875) சீறா நாடகமென்ற காரணப் புராணம் (1878)

கவிக் களஞ்சியப் புலவரின் 'சீறாவண்ணமும் சித்திரக் கவியும்' (1888)

காதிர்சா மரைக்காயரின் 'சீறா நபியவதாரப் படலம்' (1890)

அகமதலி எழுதிய 'சீறாப்பதமென்று வழங்கா நின்ற கீர்த்தனம்',

சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் 'சீறாப்புராண மூலமும் பொழிப்புரையும்' (1902, 1908)

பக்கீர் மைதீன் ராவுத்தரின் 'சீறா வெண்பா' (1910)

திண்டுக்கல் பேகம்பூர் பி.எம்.அப்துல் காதிறுவின் 'சீறா அம்மானை' (1921)

அப்துல் கபூர் சாஹிப்பின் 'சீறாப்புராணத் திருப்புகழ் மூலமும் உரையும்' (1938)

வெற்றிச் செல்வன் 'சீறாப்புராணம் நாட்டுப்படலம்' (1961)

முகம்மது உவைசின் 'பதுறுப் படலம்' கட்டுரைகள் (1963)

வி.நூர் முகம்மதுவின் 'உமறுதரும் சீறா' (1965)

புதுவை முகம்மது ஆரிப் மியான் சீறாக்கட்டுரைகள் (1967)

இளையான்குடியில் ஜாஹீர் உசேன் கல்லூரியினர் தந்த 'சீறா ஆய்வுத் திரட்டு' (1975)

எம்.எம்.உவைஸின் 'சீறாப்புராணம் அரபுச் சொற்களும் பாரசீகச் சொற்களும்' (1976)

அறிவியல் தமிழ் அறிஞர் மணவை முஸ்தபா தொகுத்த 'சிந்தைக்கினிய சீறா' (1978)

புலவர் அ.அகமது பஷீரின் உமறுப்புலவர் கவித்திறன் (1978)

கவி.கா.மு.ஷெரீபின் 'வானொலியில் சீறாப்புராணச் சொற்பொழிவு' (1980)

நாகூர் தர்கா வித்வான் வா.கு.முகம்மது ஆரிபு நாவலரின் 'சீறாப்புராணத்திலிருந்து சில பாடல்கள்'

சிலம்பொலி சு.செல்லப்பனாரின் 'நெஞ்சை அள்ளும் சீறா' பல பாகங்கள் (1984)களில்

'சீறாப்புராணம் கலைஞர் பேருரை' (1985)

டாக்டர் எம்.எம்.உவைஸின் 'உமறுப்புலவர் ஒரு ஆலிமா?' (1992)

கயத்தாறு ச.கா.அமீர்பாஷாவின் 'சீறாவில் பெண்மையும் சிறப்பும்' (1996)

சாதிக் அப்துல் ஹமீதுவின் 'சீறாப்புராண அலிமா முலையூட்டுப் படல உரை' (2004)

இதுவரை நடைபெற்ற இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் கருத்தரங்கங்களில் வெளிவந்த மலர்களில் வந்த 'சீறா ஆய்வு குறித்த கட்டுரைகள்' ஏராளம்! ஏராளம்!

இவைகளெல்லாம் மறு பதிப்பு காணலாம். ஆனால் அடியேன் வேண்டுவது,

சீறாப் புராணத்திற்கு அண்ணன் கவி கா.மு.ஷெரீப் 10 பாகங்கள் உரை தந்துள்ளார். உத்தமபாளையம் டாக்டர் மு.அப்துல் கரீம், அவரது துணைவியார் ஹனீபா அப்துல் கரீம் 6 பாகங்கள் உரை தந்துள்ளார்கள். இந்த 16 பாகங்களையும் முழுமையாகக் கிடைத்திட மாற்றோரும் படித்து மகிழ்ந்திட இஸ்லாமிய இலக்கியக் கழகம் வெளியிட வேண்டும்.

அல்லாமா இக்பால் சொல்வான்.

“கண்ணியமற்ற மண் புழுதியில் படிந்து கிடக்கும் காலடியைப் போல் அசைவற்றோ, செயலற்றோ கிடக்காதே. சதா ஓடிக்கொண்டும், அடித்துக் கொண்டுமே இருக்கும் சமுத்திரத்தின் அலைகளைப் போல அசைவுள்ளவனாக ஆகிவிடு. உனது முன்னோர்களின் மகத்துவம் நிறைந்த வீர சரிதைகளுக்குப் புத்துயிர் அளி. உனது மூதாதையர்களின் பழங்கதைகளுக்கு நித்திய ஜீவனளிப்பது உன்னுடைய அநுஷ்டானம் தான்.”[21]

கவிக்கோ அவர்களே,

'இது சிறகுகளின் நேரத்தில்' சொல்வீர்கள். ஒவ்வொரு பறவையும் தன் சக்திக்கேற்ற உயரத்தை அடைகிறது. எவ்வளவு சக்தி வாய்ந்த பறவையாக இருந்தாலும் அது எட்டும் உயரத்தோடு ஆகாயம் முடிந்து விடுவதில்லை. அது எல்லையற்று விரிந்து போய்க் கொண்டே இருக்கிறது.[22]

13.01.1991-இல் தென்னிந்திய எழுத்தாளர் மாநாட்டில் திருவனந்தபுரத்தில் தலைமையேற்று 'எழுதுகோல்களுக்கு ஒரு அழைப்பு' என்று ஆங்கிலக் கவிதை தந்தீர்கள். அதிலிருந்து சில வரிகள்.

நம் மை நோவா காலத்துப் பிரளயமாகட்டும்.

அதே நேரத்தில் நம் 'எழுதுகோல்' நோவாவின் பேழைக்குப் புதிதாகப் பறிக்கப்பட்ட ஆலிவ் இலையையும் கொண்டு வரட்டும்.

நாம் குரு ஷேத்திரத்தில் நின்று கொண்டிருக்கிறோம்.

நம் எழுது கோல் சங்காகவும் இருக்கட்டும்.

புல்லாங்குழலாகவும் இருக்கட்டும்.

நம்முடைய மக்களோ உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நாமோ பள்ளியெழுச்சிப் பாடாமல் தாலாட்டையே பாடிக் கொண்டிருக்கிறோம்.

வாருங்கள் மற்றொரு சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்குவோம்!

அன்னிய விலங்குகளிலிருந்து அவர்களை விடுவித்துவிட்டோம்.

சுதேச விலங்குகளிலிருந்து அவர்களை விடுவிப்போம்.[23]

சதுரங்கக் காயைப் போல பிறரை வெட்டிக்கொண்டு முன்னேறாதீர்கள்.

நடக்கும் பாதையெல்லாம் நலம் வழங்கிச் செல்லும் நதியைப் போல முன்னேறுங்கள்.

குறிப்புகள்

1) கவி.கா.மு.ஷெரீப், அமுதக் கலசம், சென்னை, 1964, ப. 109.
2) மேலது., ப. 53.
3) அப்துல் ரகுமான், விலங்குகள் இல்லாத கவிதை, 1987, ப. 70.
4) அப்துல் ரகுமான், வைகோ சிறை மாலை, 2004, ப. 11.
5) உமறுப் புலவர், சீறாப்புராணம், அவையடக்கப் பாடல், கடவுள் வாழ்த்துப் படலம், பாடல் 19.
6) கம்பர், கம்பராமாயணம், பாயிரம், அவையடக்கம், முதற் பாடல்.
7) வீரமாமுனிவர், தேம்பாவணி, அவையடக்கப்பாடல்.
8) காளிதாசன், ரகுவம்சம், முதல் சருக்கம், 2, 3, 4 சுலோகங்கள்.
9) அப்துல் ரகுமான், இது சிறகுகளின் நேரம், ப. 411.
10) 1946 ஆகஸ்ட் சக்தி இதழ்.
11) டாக்டர் பீ.மு.அஸ்மல்கான், இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி–4, சூபி மெய்ஞ்ஞான இலக்கியங்கள், மதுரை, 1997, பக். 596–597.
12) நீதித்துறை அரசு ஆணை எண் 629, நாள் 02.05.1900.
13) சன்மார்க்க தேசிகன் என்னும் ஊரன் அடிகள், இராமலிங்க அடிகள் வரலாறு, வடலூர், ப. 347 –348.
14) 1908–ஆம் ஆண்டிற்கான குற்றவியல் புலனாய்வுத்துறை அறிக்கை, பக். 219 – 220.
15) பாரதியார் சரித்திரம், சென்னை, 1950, ப. 41.
16) நீதித்துறை அரசு ஆணை எண் 1542, நாள் 03.10.1911.
17) CID Report Vol.III, August to November, 1908, pp. 44-51, N.Rajendran, National Movement in Tamilnadu 1905 - 1914, pp. 89-90. Madras Secreat Police Abstracts of Intellegence 1908, para 1247, p.651 & Swadeshi Steam Navigation Company File pp 12,13, 28.
18) பி.பி.கோபால கிருஷ்ணன், தேசிய இயக்கத்தில் திருநெல்வேலி மாவட்டம், 1905–1911, மதுரை 2009, ப. 31.
19) C.Veeramuthu, Tuticorin as port city contribution to trade commerce and national politics, 1890 - 1920, Ph.D. Thesis, M.S. University, p.210.
20) செ.திவான், விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள், நெல்லை, 1994, பக். 79–80.
21) இக்பால் கதைமலர், 1947, ப. 6–7.
22) கவிக்கோ அப்துல் ரகுமான், இது சிறகுகளின் நேரம், சென்னை, 2008, ப. 27.
23) கவிக்கோ அப்துல் ரகுமான், சொந்தச் சிறைகள், 1995, ப. 87–88.